# இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021

integrity icon
Sri Lanka

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

accountabilitylab

# இன்டர்கிரிட்டி ஐக்கன்

# (நேர்மைக்கு மகுடம்)

# 2021

integrity icon

Sri Lanka 2021

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

accountabilitylab

# இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021

மூன்றாம் பதிப்பு - 2021

ட்ரான்ஸ்பேரன்ஷி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
இல: 5/1 எலிபேங்க் வீதி, கொழும்பு 5

எமது நிறுவன செயற்பாடுகள் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை மேலே குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும். ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின் இல. 366, நாவல வீதி, நாவலை, ராஜகிரிய. எனும் முகவரிக்கு எமது நிறுவன செயற்பாடுகள் மாற்றப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொலைபேசி - 071 1 295 295 / 076 3 223 442

icon@tisrilanka.org
www.integrityicon.lk

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

பதிப்புரிமை கொண்டது. உள்ளடக்கத்தின் மறுபதிப்பிற்கு ட்ராான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின எழுத்து மூலமான முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா என்பது என்ன? | 02 |
| பங்காளர் நிறுவனங்கள் | 02 |
| இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021 | 03 |
| தகைமைகள் | 06 |
| தெரிவடிப்படை | 07 |
| இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) செயன்முறை 2021 | 08 |
| நியமனங்கள் | 09 |
| நடுவர் குழாம் | 09 |
| விருது வழங்கல் | 10 |
| இணைப்புகள் | 11 |

# 01. டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா என்பது என்ன?

டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா என்பது சுயாதீனமான, அரசசார்பற்ற, இலாபநோக்கற்ற நிறுவனம் என்பதுடன் நல்லாட்சியினை மேம்படுத்துவதற்கும் ஊழலை இல்லாதொழிப்பதற்கும் கடப்பாடு கொண்டுள்ள உலகளாவிய ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனலின் ஒரு தேசிய பிரிவாகும். ஊழலின் சேதமிகு விளைவுகள் பற்றி டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் விழிப்புணர்வேற்படுத்தி வரும் அதேவேளை, அதனைக் கையாளுவதற்காக செயற்திறன்மிகு செயற்பாடுகளை உருவாக்கி அமுல்படுத்துவதற்காக அரச, வர்த்தக மற்றும் சிவில் சமூகத்திலுள்ள பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றிவருகின்றது.

# பங்காளர் நிறுவனங்கள்

## Accountability Lab (எகவுண்டபலிட்டி லெப்) நிறுவனம்

எகவுண்டபலிட்டி லெப் நிறுவனம் என்பது சுயாதீனமான, இலாபநோக்கற்ற நிறுவனமாகும். இது உலகம் முழுவதும் துடிப்பான பிரஜைகளையும் பொறுப்பான தலைவர்களையும் உருவாக்க முனைகின்றது. இது சாதகமான சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கத்துடன் வகைப்பொறுப்பு முறைமைகளை வலுப்படுத்துவதற்காகப் பிரஜைகளுக்கு வழிகாட்டி, வலுவூட்டுகின்றது. பிரஜைகள் சம்பந்தப்பட்ட சமுதாயங்களில் நேர்மைத்திறனினை மேம்படுத்துவதற்காக புத்தாக்கமிகு கருத்துக்களை உருவாக்கி அமுல்படுத்த இது பிரஜைகளையும் தலைவர்களையும் ஊக்குவிக்கின்றது.

# 02. இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021

இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) என்பது நேர்மையான அரசாங்க உத்தியோகத்தர்களை கௌரவிக்க பிரஜைகளின் பங்களிப்புடன் நடத்தப்படுகின்ற உலகளாவிய பிரச்சாரமாகும். நேர்மை மற்றும் தனிப்பட்ட பொறுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்குவதற்கான நேர்மை எனும் எண்ணக்கருவினைப் பற்றிய கலந்துரையாடலினை இது உருவாக்க விளைகின்றது. புதிய தலைமுறையினர் மிகவும் செயற்திறன்மிகு அரச ஊழியர்களாக உருவாவதற்கு இது ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2014ஆம் ஆண்டு நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டு லைபீரியா, பாகிஸ்தான், மாலி போன்ற நாடுகளிலும் மிக அண்மையில் தென்னாபிரிக்காவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் முதல் கட்டமாக தேசிய ஊடகங்கள் வாயிலாக மூலம் நேர்மை பற்றிய தொடர் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரஜைகள் மூலமாக இந்த விருதுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க ஊக்கமளிக்கப்படுகிறது. இந்த நியமன காலத்தில் தொண்டர்களின் அணியொன்று நாடு முழுவதும் பயணம் செய்து நியமனங்களை உறுதிப்படுத்துவதில் உதவி செய்கிறது. நியமிக்கப்படுபவர்களின் 20 தொடக்கம் 30 பேர்களைக்கொண்ட இறுதி பட்டியல் சுயாதீனமான நடுவர்களைக் கொண்ட குழுவினால் ஐந்து பேரைக்கொண்ட இறுதி பட்டியலாகச் தெரிவு செய்யப்படும்.

இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) பொதுமக்களின் நலனுக்காகச் சேவையாற்றும் தனிநபர்களைக் கொண்டாடுகின்றது. இது நாம் பார்க்க விரும்புகின்ற மாற்றத்தினைப் பற்றிய சாதகமான சொற்பதங்களில் தேசிய கலந்துரையாடலினை வசதிப்படுத்துவதுடன் எமது சார்பிலே அரசாங்கத்திலே பணியாற்றவேண்டும் என நாம் விரும்பும் நபர்களைப் பற்றிய தேசிய கலந்துரையாடலினையும் உருவாக்குகின்றது.

## உலகலாவிய ரீதியில் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருதினைப் பெற்றவர்கள்



### நேபாளம் - 2014 ஆம் ஆண்டு வெற்றியாளர்-கயான் மணி (கல்வி அதிகாரி)

நேபாளத்தின் பன்ச்தாரின் கிழக்கு மாவட்டத்தில் 2012 இல் கயான் மணி ஒரு கல்வி அதிகாரியாக வந்தபோது பாடசாலை ஆசிரியர்களில் 90% ஆனோர் அந்த மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு வருவதில்லை. அந்த சந்தர்ப்பத்திலே 14 வயதளவிலான பாடசாலை மாணவர்களுக்கு எழுதவோ வாசிக்கவோ முடியாத ஒரு நிலைமை காணப்பட்டது. ஒரு அரசாங்க அதிகாரி என்கின்ற ரீதியில் ஆசிரியர்களுக்கெதிராக இவர் பாரதூரமான மற்றும் துணிகரமான நடவடிக்கைகளை எடுத்தார். பாடசாலைகளுக்கு வராத ஆசிரியர்களை இவர் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தியதுடன் இலஞ்சம் வாங்கும் ஆசிரியர்களையும் இவர் கடமையிலிருந்து இடை நிறுத்தினார். தமது ஆசிரியர்களைப் பற்றி தம்மிடம் முறைப்பாடு செய்வதற்காக தனது தொலைபேசி இலக்கத்தினை இவர் பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் வெளியிட்டார். பன்ச்தார் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களில் அதிகமானோரின் வருகை 2 வருடங்களினுள் 90% இனால் அதிகரித்து அடிப்படை மட்டத்திலே மாணவர்கள் சித்தியடையும் வீதம் 14% இலிருந்து 60% ஆக அதிகரித்தது. 2014ஆம் ஆண்டிலே இப்பிராந்தியத்திலே கல்வி மறுசீரமைப்பிற்காக இவர் காட்டிய கடப்பாட்டிற்காகவே நேர்மைத்திறன் விருதினை இவர் வெற்றிகொண்டார். இந்த அங்கீகாரத்துடன் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) தேசிய கல்வி அமைச்சு உபாயமார்க்கத்திற்காக இவரின் மதியுரையினைப் பெற்றுக்கொள்ள ஆரம்பித்தது. அண்மையிலே சிறந்த அடிப்படைக் கல்வி முறைமைக்காக ஐரோப்பா அவற்றின் நாடுகளில் இவரின் மதியுரைக்காக இவரை அழைத்திருந்தது.



## லிபேரியா - 2019 இன் வெற்றியாளர்
## மிசு எம். முல்பாஹ்
## வைத்திய தாதி

மிசு எம். முல்பாஹ் அவர்கள் க.ஃபர்ங்க (Gbarnga Bong) பாங் நாட்டில் அமைந்துள்ள சி.பி . டன்பர் வைத்தியசாலைக்கு வருகை தரும் பாலியல் மற்றும் பாலின வேறுபாட்டு வன்முறைகள் தொடர்பான வழக்குகளையும் கையாளும் ஒரு திறமையான மற்றும் முக்கிய நபராக சுகாதார அமைச்சு மற்றும் சமூக நல அமைப்புகளிலும் சிறந்த சேவையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் டேமெண்ட் மற்றும் கோகோயாய்ஹ் சேரி புற மக்களுக்கான மாவட்ட தலைவராகவும் பணியாற்ற க.ஃபர்ங்க மாநகர முதல்வரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக Cuttington University Undergraduate School in Suacocot இல் தனது மருத்துவ தாதி படிப்பையும் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் சி.பி. டன்பர் வைத்தியசாலையில் பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென ஒரு தனியான நிலையத்தையும் மிசு எம். முல்பாஹ் அவர்கள் நிறுவியும் உள்ளார். இவ்வாறு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு சிகிச்சைக்காக தமது நிலையத்துக்கு வரும் மக்களுக்கான நீதியை பெற்று கொடுப்பதற்காக சி.பி. டன்பர் வைத்தியசாலையின் நிறைவேற்று அதிகாரி மற்றும் வைத்திய நிர்வாகத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மிசு எம். முல்பாஹ்வின் கண்ணோட்டத்தில் நேர்மை என்பது "எமக்கு வழங்கப்பட்டுள்ள சேவை/தொழிலை சரியாய் செய்வதாகும். மேலும் அவர் குறிப்பிடுகையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொழிலை அல்லது சேவையை சரியாக செய்யுங்கள், எவ்விதமான இலஞ்சமும் பெறாதீர்கள், எவ்விதமான விட்டுக்கொடுப்புகளுக்கும்/ சிரமங்களுக்கும் உடன்படாதீர்கள், உழலற்ற வகையில் சரியான முறையில் உங்களது தொழிலை/ சேவையை முன்னெடுத்து செல்லுங்கள்".




## பி. கருணாரத்ன பண்டார
## கோட்ட கல்வி பணிப்பாளர்
## இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) - 2018 வெற்றியாளர்

தனது கடமைகளை எம்பொழுதும் நேர்மையாக செயற்படுத்த முயற்சிக்கும் திரு. கருணாரத்ன பண்டார, தனது மாகாணத்தின் மிக சக்திவாய்ந்த அரசியல் அதிகாரத்துடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர் இடமாற்றப்பட்டார். ஆனால் கொள்கை மற்றும் நிலைப்பாடு சரி என்பதை நிரூபிக்க உச்ச நீதிமன்றத்தை அவர் நாடினார். பாடசாலை அதிபராக கடமையாற்றிய காலத்திலிருந்தே அவர் மக்களுக்காக சேவை செய்யும் நல்லுள்ளம் கொண்டவராவார்.




## பி.ஏ.சி. பிரியதர்சினி
## அதிபர் - சென். மேரிஸ் கல்லூரி
## இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) - 2019 வெற்றியாளர்

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் இடம்பெறுகின்ற ஊழல் முறைகேடுகள் சாதாரண பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையாகும். மத்துகம புனித மரியாள் கல்லூரியின் அதிபர் பிரியதர்ஷனி அவர்கள் இவ்வாறான ஊழலை தவிர்ப்பதற்காகவும் இல்லாதொழிப்பதற்காகவும் வெளிப்படைத் தன்மையுடனான புள்ளி வழங்கல் முறையினை பின்பற்றுகின்றார். இதனால் அப்பிரதேச மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றதோடு, அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியாது செயற்பட்டதனால் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. இவர் கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு மிகவும் செயற்றிறன்மிக்கவகையில் ஈ போர்ட் பாவனையூடான கற்றல் முறைகளை அறிமுகப்படுத்தியதோடு விளையாட்டிலும், கற்றல் செயற்பாடுகளிலும் பாடசாலையின் அபிவிருத்திக்காக தன்னை அர்ப்பணித்த இவர் கௌரவத்திற்குரியவர்.



## இனோக்கா ஹிமாலி ரத்னவீர
## பிரதேச செயலாளர் - காலி
## (Galle Four Gravets Divisional Secretariat)
## இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) - 2020 வெற்றியாளர்

அரச சேவையில் பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமாக சேவை வழங்கக்கூடிய இடமாக திகழ்வது பிரதேச செயலகமாகும். ஏராளமான பொது மக்கள் தமது அன்றாட தேவைகளுக்கு பொருத்தமான சேவையினை பெறுவதற்காக தினமும் பிரதேச செயலகங்களுக்கு வருகை தருகின்றனர். காலி பிரதேச செயலாளர் திருமதி. இனோக்கா ஹிமாலி ரத்னவீர, இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை குறைக்க மற்றும் தனது அலுவலக செயற்பாட்டினை ஒருமுகப்படுத்த நவீன தொழிநுட்பத்துடனான செயல்முறை ஒன்றினை அறிமுகப்படுத்தினார். நீண்ட கால பிரச்சினையாக காணப்படுகின்ற அரச பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்க, வாக்காளர் பதிவுகளில் முறைகேடாக பெயர் பதிவுகளை மேற்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்த கிராம அலுவலர்களை நீக்கி புதிய அலுவலர்களை நியமித்து அவர்களுக்கு தேவையான பயிற்சியையும் அளித்து குறித்த பிரச்சினைக்கு முறையான தீர்வினை பெற்றுக்கொள்ள முனைந்தார். அரசியல் அதிகாரங்களினால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் மற்றும் அச்சுறுத்தல்களை தைரியமாக முகங்கொடுத்து மக்களுக்கு நியாயமான முறையில் சேவையினை வழங்குவதற்கும் தனது கடமைகளை நேர்மையாக செய்வதற்கும் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பொது மக்களினால் அவர் மிகவும் பாராட்டப்பட்டார்.

# 03. தகைமை

அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களுடனான அவர்களது ஈடுபாட்டின் போது நேர்மையை வெளிக்காட்டுபவர்களாக இருக்க வேண்டுமென்பதுடன் அவர்கள் தமது சேவைகளை வழங்குவதில் தமது சக்திக்கு அப்பாற்பட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களாக இருக்க வேண்டும். இதுவே போட்டிக்கான தகைமைகள் ஆகும். போட்டியில் பங்குபற்றுபவர்களது நடத்தை உன்னதமான பண்புகளைக் கொண்டதாகவும் மெச்சத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இவர்களின் நடத்தையானது மற்றவர்களையும் கவரக்கூடியதாகவும் தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் தகைமையுடையவர்களாக ஆகமாட்டார்கள்.

## விண்ணப்பதாரி,

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- அரசாங்கத்திலோ, அரச நிறுவனத்திலோ அல்லது திணைக்களமொன்றிலோ ஓய்வு பெறுவதற்கு ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலத்தை உடையவராக இருக்க வேண்டும்.
- இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருதுக்காக விண்ணப்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலே அரசாங்கப் பதவியில் குறைந்தது 5 வருடம் பணியாற்றி இருக்க வேண்டும்.
- அரசாங்க உத்தியோகத்தராக/சிவில் சேவை உத்தியோகத்தராக தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நேர்மையுடன் நிறைவேற்றியவராக இருக்க வேண்டும்.
- குற்றச்செயல்கள், ஊழல் மற்றும் எவ்வகையிலுமான அதிகார துஸ்பிரயோகம் ஆகியவை தொடர்பாக குற்றம் சாட்டப்படாதவராகவும் எந்தவொரு ஒழுங்குபடுத்தல் அமைப்பினாலும் பதவியிலிருந்து நீக்கப்படாதவராகவும் இருக்க வேண்டும்.
- நடுவர் குழுவின் முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
- கோவிட்-19 தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படும் அரச ஊழியராக இருத்தல் வேண்டும்.
- உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களில் ஒளிப்பரப்புவதற்காக தயாரிக்கப்படும் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விளம்பர செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கான விருப்பத்தினையும் சம்மதத்தினையும் அதற்கு ஒத்துழைப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

## இலங்கையில் அரசாங்க உத்தியோகத்தர்கள்

இலங்கையின் குடியுரிமையைப் பெற்ற எவரேனுமொரு அரசாங்க ஊழியராக இருக்கலாம் என்பதோடு, அதிகாரசபை, அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது பாதுகாப்புச் சேவை மையத்தைச் சேர்ந்த நிரந்தர ஊழியராகவும் இருக்கலாம்.

## இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) மகுடம் என்றால் என்ன?

இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) என்பது அடிப்படையில் ஊழலற்றதொரு நிலையினை குறிக்கின்றது. அதனை விரிவாக விளக்கும் போது தமது சேவைகளை வழங்குப்போது, குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு அல்லது சமூக அர்ப்பணிப்பு மற்றும் கடுமையான நெறிமுறைக் கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலம் தமது கடமைக்கும் மேலாக சென்று மேலதிகமான சேவைகளை மக்களுக்கு வழங்குபவராகவும் உள்ள ஒரு நபரை அடையாளம் கண்டுகொள்ளும் ஒரு விடயம் ஆகும்.

# 04. தெரிவடிப்படை

நியமனமானது பின்வரும் தெரிவடிப்படைகள் பூர்த்தி செய்யப்படுவதை வெளிப்படுத்த வேண்டும்.

பொறுப்பேற்கப்பட்டுள்ள முன்னெடுப்புக்களின் தாக்கத்தின் முக்கியத்துவம் பின்வரும் பகுதிகளில் அடைகின்ற தனிப்பட்ட மட்டத்திற்கு அப்பால் எடுக்கக்கூடிய இந்த முயற்சி/ செயற்பாடு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் அளவு

- நிறுவனம்
- உள்ளூர் மட்டம்
- தேசிய மட்டம்
- சர்வதேச மட்டம்

- இவ்வாறான தகைமைகளை கொண்டிருப்பவரினால் உறுதியானதும் கடினமானதும் என அவர் நினைக்கக்கூடிய உறுதியான சவால்களை அவர் எந்தளவிற்கு வெற்றி கொண்டுள்ளார்.
- சாதகமான பெறுபேற்றினை அடைவதற்கு மேற்கொண்ட தனிப்பட்ட, பொருளாதார, பௌதீக, சமூக, தொழில் ரீதியான அல்லது நிறுவன ரீதியான தியாகங்களின் அளவு
- அரசாங்க சேவையில் முன்னெடுப்புகளை ஒரு ஒப்பீட்டு நியமக்குறியாகப் பயன்படுத்துவ தற்கான ஆற்றல்.
- பொறுப்பேற்கப்பட்டுள்ள முன்னெடுப்புக்களில் ஈடுபடுவதற்காக பதவி வழங்கியுள்ள வாய்ப்பினை அவர் ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்துகின்ற மட்டம்.
- நியமிக்கப்படுபவர் நேர்மைக்காகவே நியமிக்கப்படுகின்றார் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். ஊதாரணமாக சமுதாயத்தில் வெறுமனே தனது பணியை ஆற்றுவதற்காக அல்ல.
- கோவிட் தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்த தாம் ஆற்றிய சேவையின் அர்ப்பணிப்பு மற்றும் நேர்மை என்பன இங்கு கவனத்திற் கொள்ளப்படும்.

# 05. இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021 செயன்முறை

| | |
|---|---|
| **ஜூலை 2021** | நடுவர் குழுவை நியமித்தல் |
| **ஜூலை - செப்டம்பர் 2021** | இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தல் அச்சு, இலத்திரனியல் மற்றும் ஒன்லைன் ஊடகம் மூலமாக விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகளை கோருதல். பெறப்பட்ட விண்ணப்பங்களை வகைப்படுத்தி பொருத்தமற்ற விண்ணப்பங்களை நீக்குதல். |
| **செப்டம்பர் - அக்டோபர் 2021** | தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தகவல்களை சரிபார்த்தல் |
| **அக்டோபர் - நவம்பர் 2021** | நடுவர் குழுவினரால் சிறந்த பத்து போட்டியாளர்களை தெரிவு செய்தல். |
| **நவம்பர் - டிசம்பர் 2021** | நடுவர் குழாமினால் பரீட்சிக்கப்பட்ட நியமனங்களை மதிப்பிட்டு இறுதி ஐந்து போட்டியாளர்களை தெரிவு செய்தல் |
| **டிசம்பர் 2021** | விருது வழங்கும் வைபவம் |

தெரிவுச் செயன்முறை பற்றிய விரிவான விபரிப்புப் பிற்சேர்க்கை (**B**) வழங்கப்பட்டுள்ளது.

# 06. நியமனங்கள்

யார் வேண்டுமானாலும் தங்களை அல்லது வேறொருவரை பரிந்துரைக்க முடியும். (இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை பார்க்கவும்). பின்வரும் வழிகளுடாக உரிய விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

- இணையத்தளம் [www.integrityicon.lk]
- மின்னஞ்சல் [icon@tisrilanka.org]
- கையினால் எழுதப்பட்ட மற்றும் அச்சிடப்பட்ட பத்திரங்களை 5/1 எலிபேங்க் வீதி, கொழும்பு 05 இலுள்ள நிறுவனத்தில் நேரடியாகக் கையளிக்கலாம். அல்லது இந்த முகவரிக்குத் தபாலில் அனுப்பலாம்

> எமது நிறுவன செயற்பாடுகள் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை மேலே குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும். ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின் இல. 366, நாவல வீதி, நாவலை, ராஜகிரிய. எனும் முகவரிக்கு மாற்றப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நியமன விண்ணப்பப்படிவம் தொடர்பாகவும் செயன்முறை தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் தயவுசெய்து எமது தொலைபேசி இலக்கத்தினைத் தொடர்பு கொள்ளவும். 0711295295.

# 07. நடுவர் குழு

நடுவர் குழுவில் நேர்மையை வெளிக்காட்டிய, சமூகத்திலே அங்கீகாரத்தினைப் பெற்ற, மிகவும் சிறப்பான 5 பேர் TISL இனால் நியமிக்கப்படுவார்கள். மேலும் இவர்களே விண்ணப்பங்களை மதிப்பிடுவார்கள். மேலும் தெரிவுச்செயன்முறையில் நடுவர் குழு நேர்மைக்கான உயர் தராதரத்தினைப் பேணி பின்வருவனவற்றைப் பொறுப்பேற்பர்.

- பரிந்துரைகள் மற்றும் விண்ணப்பங்களை அழைப்பதற்கு முன்னால் வழிகாட்டல்கள் மற்றும் செயல்விதிகளை மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வு செய்தல்
- தனிநலன் சார்ந்த முரண்பாடுகள் ஏற்படும்பொழுது குறிப்பிட்ட நியமனத்திற்கு வாக்களிப்பதிலிருந்தும் தவிர்த்து கொள்ளுதல்.
- குறிப்பிட்ட நியமனத்திற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டவரிடம் மேலதிக தகவல்களை வழங்குமாறு கோருதல்.
- தேவையேற்படின் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுதல்
- வழங்கப்பட்ட தகவல்கள் போதாதவையாக இருக்கும் போது அதை நியமனத்திற்காக பரிசீலிக்க மறுத்தல்
- தேவையேற்படின் வழங்கப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையினைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அல்லது அவர் வாழும் இடத்திற்கு விஜயம் செய்தலும் தேவைக்கேற்ப மேலதிக தகவல்களின் சான்றினைப் பெற்றுக் கொள்ளுதலும்
- தெரிவு செய்யப்பட்ட இறுதியான ஐவரின் பெயர்களை வெளியிடுதல்.
- நியமனங்கள் தேவைப்பட்ட தராதரங்களுக்கு அமைய இல்லாமல் இருக்கும் பொழுது இறுதி 5 பேரையும் தெரிவுசெய்வதிலிருந்தும் தவிர்ந்து இருத்தல்.
- ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தினதும் செயற்றிட்டத்தினதும் நேர்மைத் தன்மையை பாதுகாப்பதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை மீளப் பெறுதல்.
- ஒரு போட்டியாளர் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக நடவடிக்கை மற்றும் தீர்மானங்கள் நடுவர் குழுவினூடாக மேற்கொள்ளப்படும்.
- நடுவர் குழுவின் முடிவுவே இறுதியானதாகும்.

# 08. விருது வழங்கும் வைபவம்

விருது வழங்கல் வைபவம் 2021 டிசம்பர் மாதத்தில் நடைபெறும்.

டிரான்ஸ்பெரன்சி இன்டெர்னஷனல் ஸ்ரீ லங்கா (TISL) மற்றும் எகவுண்டபலிட்டி நிறுவனத்தின் தலைவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகள் கலந்துகொள்ளும் வைபவத்தில் வெற்றி பெற்றவருக்கு வழங்கப்படும். முயற்சிகள் மற்றும் அடைவுகள் பற்றிய விழிப்புணர்வினைத் தேசிய ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் உருவாக்குவதற்காக விசேட பத்திரிகை உள்ளடக்கமும் பிரசித்தமும் வழங்கப்படும்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட விருது மீளப்பெறப்படும்.

- கடந்த காலத்திலே விருதுக்காகத் தகைமைப் பெற்ற ஒருவர் அவ்வாறு தகைமைப் பெறுவதற்கு உண்மைகளை மறைத்துள்ளார் எனக் கண்டறியப்படும் பட்சத்தில்
- கடந்த காலத்தில் வெற்றிபெற்ற ஒருவர் நேர்மைத்திறன் விழுமியங்களுக்கு இயைபுற வில்லை என மேலும் தெரியவரும் போது

வெற்றியாளர் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது புகார்கள் பெறப்பட்டால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1. ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா அதிகாரிகள் மூலம் அனைத்து தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் திரட்டப்படும்.
2. திரட்டப்பட்ட ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய கோப்பினை இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) நிகழ்வின் நடுவர் குழுவிற்கு சமர்ப்பித்தல்.
3. குறித்த கோப்பினை ஆராய்ந்த பின்னர் நடுவர் குழுவின் ஆலோசனையின் பேரில் முறைப்பாட்டில் உள்ள குற்றச்சாட்டுக்கள்/ உண்மைகள் குறித்து மேலதிக விபரங்கள் அல்லது விளக்கங்கள் வழங்கவோ அல்லது தேவைக்கேற்ப பதிலளிக்கவோ குறித்த நபர்களுக்கு அவகாசம் வழங்கப்படும். இரு தரப்பினரையும் சாட்சியங்களையும் விசாரித்த பின் குறித்த புகாரை தொடர்வதா இல்லையா என்பதை நடுவர் குழாம் தீர்மானிக்கும். புகாரை மேலும் முன்னோக்கி நகர்த்தாமல் முடிவுக்கு கொண்டு வருவதாயின் முறையான காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும். புகார் மீண்டும் தொடர்ந்தால், அது பின்வருமாறு செயற்பட வேண்டும்.
4. முறைப்பாட்டின் இரு தரப்பின் கருத்துக்களையும் பரிசீலித்த பின்னர் சம்பந்தப்பட்ட நடுவர் குழாம் குறித்த முறைப்பாடு சம்பந்தமான அறிக்கையினை தயாரித்து டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின் பணிப்பாளர் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
5. குறித்த அறிக்கையினை பணிப்பாளர் குழுவிற்கு சமர்ப்பித்த பின்னர், இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) வெற்றிக்கிண்ணம் மற்றும் சான்றிதழ் என்பவற்றை மீளப்பெறல் சம்பந்தமான முடிவினை பணிப்பாளர் குழுவே முடிவு செய்யும். வெற்றிக்கிண்ணம் மற்றும் சான்றிதழ் என்பவற்றை மீளப்பெறும் காலக்கெடுவும் தீர்மானிக்கப்பட வேண்டும். குறித்த கலப்பகுதியினுள் வெற்றிக்கிண்ணம் மற்றும் சான்றிதழ் என்பவற்றை ஒப்படைக்கவில்லை என்றால் பணிப்பாளர் குழு அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யும்.

## பின்னிணைப்பு 'A' - மாதிரி நியமனப் படிவம்

பரிந்துரைப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு : 2021 செப்டம்பர் 06 அல்லது அதற்கு முன்பு பரிந்துரைக்கப்படும் நபர்கள் பற்றிய தகவல்கள் **(தயவு செய்து கவனமாக வாசித்து தேவைப்படும் சகல தகவல்களையும் பூர்த்தி செய்யவும்)**

பெயர் : ................................................... பிறந்த திகதி : ................................................
வயது .................... பால்நிலை: ................................................
தொலைபேசி / மொபைல்: ................................................... மின்னஞ்சல்: ................................................
நிரந்தர முகவரி: ..........................................................................................................
தற்போதைய அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................
மாவட்டம் : .......................................................... மாகாணம்..........................................................
தொடர்பு இலக்கம் : ..........................................................................................................
அரசாங்க சேவையில் இணைந்த திகதி : ..........................................................................
ஓய்வு பெறுவதற்கு எஞ்சியுள்ள வருடங்கள்: ..........................................................................
பரிந்துரைக்கப்படும் நபருக்கெதிராக நிறுவன மட்டத்திலோ அல்லது நீதி மன்றத்தினூடாகவோ புகார்கள் அல்லது வழக்குகள் காணப்படுமாயின் அது தொடர்பான தகவல்களை பதிவிடுங்கள்.

..........................................................................................................

..........................................................................................................

**.............................(தங்களால் பரிந்துரைக்கப்படுபவர்) 2021 இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருதினை பெறுவதற்கு தகுதியானவர் எனின், கீழே வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு நிறுவுக. தங்களால் சிபாரிசு செய்யப்படும் நபரது அனைத்து விதமான தொழில்முறைசார்ந்த வாழ்க்கை முறைமைகளும் முறையான ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.)**

விண்ணப்பதாரர்/பரிந்துரைக்கப்படும் நபர் அவரது தனிப்பட்ட மற்றும் தொழில்சாந்த வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சமத்துவத்தை மதிப்பவராகவும், நேர்மையாகவும் எவ்வாறு கடமையாற்றுகின்றார்? அவ்வாறான மூன்று சந்தர்ப்பங்களை மிகவும் தெளிவாக உதாரணங்களுடன் குறிப்பிடவும். குறிப்பிடுவதற்கு மேலதிகமாக இடம் அவசியமாயின் புதியதொரு தாளில் குறிப்பிடவும். (குறிப்பிடப்படும் உதாரணங்கள் கையேட்டில் 7ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவடிப்படை விதிமுறைகளுக்கு அமைவானதாக இருக்க வேண்டும்)

1..........................................................................................................

2..........................................................................................................

3..........................................................................................................

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு பொருத்தமான கடிதங்கள் மற்றும் சான்றுகள் இருப்பின் இத்துடன் இணைக்கவும் (உதாரணமாக: நற்சான்றிதழ்கள், செய்திகள், கட்டுரைகள், புகைப்படங்கள் மற்றும் இணையத்தளம்)

**பரிந்துரைப்பவரின் விபரங்கள் (பரிந்துரைக்கப்படும் நபர் வேறு ஒருவராக இருப்பின்)**
பெயர் : ................................................ பதவி : ................................................
பரிந்துரைக்கப்படுபவருடனான உறவுநிலை: ................................................
தொழில் : ................................................ தொலைபேசி / மொபைல் : ................................................
மின்னஞ்சல் ................................................
நாடு (பரிந்துரைப்பவர் நாட்டிற்கு வெளியே இருப்பின்): ................................................

**நீங்கள் வழங்கிய தகவல்களைப் பரிசீலிப்பதற்கும் மேலும் மேலதிக தகவல்களுக்காகவும் தயவு செய்து தொடர்புகளைக் கீழே வழங்கவும்.**

சகபாடி: பெயர் : ................................................ தொடர்பு இல: ................................................
தலைமை அலுவலகம்: பெயர்: ................................ தொடர்பு இல: ................................................
ஏனையோர்: பெயர்: ................................................ தொடர்பு இல: ................................................

மேற்கூறப்பட்ட தகவல்கள்/வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப்படுத்துவதோடு, வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானது என நிரூபிக்கப்படும் பட்சத்தில் குறித்த விருதுக்காக பரிந்துரைக்கப்பட்ட போட்டியாளர் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருதுக்கான தெரிவிலிருந்து விலக்கப்படுவர் என்பதனையும் அறிவேன்.

.....................................................
ஒப்பம்

இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021 நிகழ்ச்சி தொடர்பாக எவ்வாறு நீங்கள் அறிந்து கொண்டீர்கள சமூக வலைத்தளம் / பத்திரிகை / வலைத்தளம் / போஸ்டர்கள் / வேறு

**பிற்சேர்க்கை 'B' - தெரிவுக்கட்டச் செயன்முறை**

## கட்டம் 1- பரிந்துரைகளை ஒப்படைத்தல்

அனைத்து பரிந்துரை விண்ணப்பங்களும் ஒரு தரவுத் தளத்தில் உள்ளடக்கப்படும் மற்றும் இனையதளத்தினுடாக பெறப்படும் விண்ணப்பங்களும் அதனுடன் இணைக்கப்படும்.

## கட்டம் 2- செல்லுபடியாகக்கூடிய சான்று

பொருத்தமற்ற சகல பரிந்துரை விண்ணப்பங்களும் முதன்மை திரையிடலில் நிராகரிக்கப்படும்.

## கட்டம் 3 - நியாயப்படுத்தல்

இரண்டாம் கட்ட செயற்பாட்டின் பின் மிகுதியான பரிந்துரை விண்ணப்பங்கள் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விருதுக்கு தகுதி பெற பொருத்தமான பிரத்தியோகங்களில் மீளாய்வு செய்யப்படுதல் - நியமனத்திற்கான தெளிவான நியாயப்படுத்தல்கள் வழங்குதல்.

## கட்டம் 4 - பூர்வாங்க விசாரணை

3 ஆம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொருத்தமுடைய போட்டியாளர்கள் மீளாய்வுச் செயன்முறையின் பூர்வாங்க விசாரணைக்கு உட்படுவர். இங்கு தன்னார்வாரள்கள் தொலைபேசியின் மூலமாகவும் தொடர்புகொண்டு நியமித்தவருடன் தொடர்புகொண்டு பின்புலத் தகவல்களைப் பரிசீலிப்பர்.

## கட்டம் 5- மீளாய்வு

பூர்வாங்க விசாரணைகளுடாக 20 அல்லது 30 போட்டியாளர்களைத் தேர்ந்தெடுத்து மேலும் அவை பின்வரும் வழிகளில் விசாரிக்கப்படும்,

- சம்பந்தப்பட்ட நிறுவன பொறுப்பாளர்கள் மற்றும் சக ஊழியர்களுடனான தொலைபேசி உரையாடல்.
- விண்ணப்பதாரியின் சமூக ஊடகங்களின் பதிவுகள் மற்றும் உள்ளடக்கங்களை ஆய்வு செய்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 போட்டியாளர்களின் சமூகநிலை விசாரணைகள் நடாத்தப்படும் (உம் விண்ணப்பதாரியின் பணியிடங்களுக்கு சென்று அவர்களிடமிருந்து சேவை பெறும் பொது மக்களிடம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்படும்).

## கட்டம் 6 - தீர்மானித்தல்

நடுவர் குழு ஏற்பாட்டு குழுவினால் தெரிவு செய்யப்படுகின்றது. நடுவர்கள் பக்கச்சார்பற்றவர்களாக, புறவயமானவர்களாக, குறிப்பிட்ட நாட்டில் நன்கு மதிக்கப்படுபவர்களாக இருப்பது அவசியமானதாகும். நடுவர்களில் பின்வருவோர் உள்ளடங்குவர். முன்னாள், மரியாதைக்குரிய, ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவின் தலைவர், பிரபலமான நேர்மைத் திறனுடைய நீதிபதி, நேர்மைக்காகப் பெரிதும் அறியப்பட்ட சிவில் சமூக சட்டத்தரணி. நடுவர்களின் குழாம் மூன்று முதல் ஐந்து நபர்களைக் கொண்டிருக்கலாம் (தீர்மானங்களின் பெரும்பான்மையினை உறுதிப்படுத்துவதற்காக ஒற்றை இலக்கங்களில் அமைவது சிறப்பு).

அணியானது தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்கள் பற்றிய பின்புலத்தினை நடுவர் குழாமுடன் பகிர்ந்து கொள்கின்றது. இதிலே நியமிக்கப்படுபவர்களின் பின்புலம், வாழ்க்கைப்பாங்கு மற்றும் நேர்காணல் குறிப்புகள் உள்ளடங்கும். நடுவர் குழாத்திற்க்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீள் பரிசோதனை செய்வதோடு தேவைப்படுமிடத்தில் நிராகரிக்கக்கப்பட்டதற்கான காரணங்களை அறிவதற்காக விசாரனை செய்ய முடியும். அதன் பின்னர் நடுவர்கள் வாக்களிப்பை மேற்கொள்வர்.

ஒவ்வொரு நடுவரினதும் வாக்கும் சமமானதாகக் கருதப்படும்.

## கட்டம் 7- உறுதிப்படுத்துதல்

தகவல்களை உண்மைப்படுத்துவதற்காகவும் அவர்களின் நேர்மைத்திறனையும் பண்புகளையும் உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் பிரச்சாரத்திலே பங்குபற்றுபற்றுவதற்கான அவர்களின் ஆர்வத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் அணியானது அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்களை சந்திக்கும். மேலும் நியமிக்கப்பட்டவரின் தற்போதைய மற்றும் முன்னாள் ஊழியர்களுடன் மேலதிக பரிசீலிப்புகளையும் மேற்கொள்ளும்.

முதல் ஐந்து பரிந்துரைக்கப்பட்டவர்களில் எவராவது ஒருவர் பங்குபற்ற முடியாவிட்டால் அல்லது ஏதாவது காரணத்திற்காக நீக்கப்பட்டால் ஆறாவது தெரிவு மேலே கொண்டுவரப்படும். இது ஐந்து நியமனங்கள் உறுதிப்படுத்தப்படும் வரையில் மேற்கொள்ளப்படும்.

இறுதியான ஐந்து பரிந்துரைக்கப்பட்டவர்களும் பின்வருவனவற்றுக்குத் தயாராக இருக்கவேண்டும்: வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை அல்லது ஒன்லைன் தளங்களுடனான நேர்காணல், இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) தொடர்புடைய புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட கதைகளை பகிர்தல். மற்றும் விருது வழங்கும் வைபவத்தில் பங்குபற்றுவதற்கு உள்நாட்டிலே பயணம் செய்தல் என்பவற்றிட்கு தயாராக இருக்க வேண்டும்.

## இணைப்பு 'C' - இணக்கக் கடிதம்

யாருக்கு : ............................................................
டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா

யாரிடமிருந்து : வேட்பாளர்(கள்) (பெயர்கள் / விலாசங்கள்)

திகதி : ............................................................

இணக்கக் கடிதம்

1. டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) ஏற்பாடு செய்யப்படும் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) 2021 இற்காக நான் நியமனம் செய்யப்பட்டிருப்பதை எனக்கு அறிவிக்கப்பட்டதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

2. அவ்வாறான நியமனத்திற்கான இணக்கத்தினை நான் வழங்குகின்றேன்.

3. நான் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) மகுடம் விருதிற்காகத் தெரிவு செய்யப்படுவோரின் முதல் சுற்றிலே உள்ளடக்கப்படும் போது என்னுடைய நியமனத்தினைப் பகிரங்கப்படுத்துவதற்கு நான் (TISL) க்கு அதிகாரம் அளிக்கின்றேன்.

4. என்னுடைய நியமனத்திற்கான தகுதியினை ஆய்வு செய்வதற்குத் தனிப்பட்ட ஆய்வினை நடத்த நான் TISL க்கு அனுமதி அளிக்கின்றேன்.

5. சகல நியமனங்களும் TISL இற்கு உரித்தானது என்பதையும் மேலும் நியமனம் ஒன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் நியமிக்கப்படுபவரின் குரல் மற்றும் படங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையினை TISL பெற்றுக்கொள்கின்றதென்பதையும் இதனை நட்டஈடு அல்லாமல் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) வைபவம் ஆகியவை தொடர்பாக எந்தவொரு மொழியிலும் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ விளம்பரம் செய்வதற்கும் பிரசித்தப்படுத்துவதற்கும் உள்ள (TISL) இன் உரிமையினையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

6. ஒரு போட்டியாளர் என்கின்ற ரீதியில் என்னுடைய அறிவிற்கு அப்பால் மேலும் எனது எழுத்து மூலமான இணக்கமின்றி என்னுடைய தனிப்பட்ட தகவல்களினைச் சேகரிப் பதற்கோ அல்லது களஞ்சியப்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நான் (TISL) க்கு அதிகாரம் அளிக்கவில்லை. நடுவர் குழாமினால் நியமனத்தினை மதிப்பீடு செய்யும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே என்னுடைய தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதற்கு நான் (TISL) க்கு அதிகாரம் அளிக்கின்றேன்.

7. நான் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) வாக்குறுதியினை எடுப்பதற்கும் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) உயர் விழுமியங்களைச் சகல சந்தர்ப்பங்களிலும் பற்றிப்பிடிக்கவும் விரும்புகின்றேன்.

8. எந்தவொரு குற்றம், ஊழல் அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் நான் ஈடுபடவில்லை என்பதையும் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ எந்தவொரு குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்பதை ஒரு போட்டியாளராக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

உங்கள் உண்மையுள்ள,
ஒப்பம் : ...................................
பெயர் : ...................................
திகதி: ...................................

## பிற்சேர்க்கை ‘D’ - இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) உறுதிமொழி

........................................................................... ஆகிய நான், எமது எதிர்கால சந்ததியினருக்கு நேர்மையான மற்றும் வளமான தேசத்தினை வழங்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்க என்னை அர்ப்பணிப்பேன் என்றும் உறுதி பகிர்கின்றேன்.

ஒப்பம் :

திகதி :

## இணைப்பு ‘E’ - நியமிப்பவருக்கான வாக்குறுதி

இலங்கைப் பிரஜை என்கின்ற ரீதியில் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) விழுமியங்களை மதித்து நான் பின்வருவனவற்றிற்கான எனது வாக்குறுதியினை இத்தால் மொழிகின்றேன்.

- பரிந்துரைக்கப்படுபவர் இன்டர்கிரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) கையேட்டிலே வழங்கப்பட்டுள்ள தெரிவடிப்படைகளைப் பூர்த்தி செய்கின்றார். மேலும் அவர் சட்டத்திற்குக் கீழ்ப்படிகின்ற, பொதுமக்களுக்குச் சேவையாற்றுகின்ற, நேர்மையினை வெளிப்படுத்துகின்ற ஒரு நபராவார்.
- பரிந்துரைக்கப்படுபவர் அவரது கடமைகளை அரசாங்க உத்தியோகத்தர் / சிவில் சேவையாளர் என்கின்ற ரீதியில் பொறுப்புக்களுடனும் நேர்மைத்திறனுடனும் நிறைவேற்றி வருகின்றார்.
- பரிந்துரைக்கப்படுபவர் எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் ஊழலுக்காகவும் குற்றம் சாட்டப்படாதவர் என்றும் அவர் அதிகாரத் துஸ்பிரயோகம் மேற்கொள்ளவில்லை என்றும்
- இலங்கையிலோ அல்லது வேறு நாட்டிலோ அவர் எந்தவொரு அரச நிறுவனங்களினாலும் நீக்கப்படவில்லையென்பதையும் நான் உறுதி அளிக்கின்றேன்.
- போட்டியாளராகிய நான் எந்தவொரு குற்றச்செயலுக்காகவும் ஊழலுக்காகவும் குற்றம் சாட்டப்படாதவர் என்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் மேற்கொள்ளாதவர் என்றும் இலங்கையிலோ அல்லது வேறு நாட்டிலோ எந்தவொரு அரச நிறுவனங்களினாலும் நீக்கப்படவில்லையென்பதையும் உறுதி அளிக்கின்றேன்.

(பரிந்துரைப்பவர்)

ஒப்பம் :

திகதி :

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

accountabilitylab

Transparency International Sri Lanka,
5/1, Elibank Road, Colombo 05

071 1 295 295 076 3 223 442

www.integrityicon.lk icon@tisrilanka.org